# அறிவுத் தீ கொளுத்தி வைத்த அண்ணாவின் வாரிசு!



கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

“மனித இனம் தன்னுடைய சிந்தனைகளைத் தான் சேர்த்த அறிவுச் செல்வத்தைப் பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவி தான் புத்தகங்கள்!. எனவே தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் வாசிப்பு மூலம் அறிவுத்தீ பரவட்டும்” என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல் விடுத்திருக்கிறார் .சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026 நிறைவு விழாவில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு பேசியிருக்கிறார் .

எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள், வாசகர்கள் என எல்லோருக்குமான உறவுப் பாலமாக இந்தப் புத்தகத் திருவிழா சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது.

கலை இலக்கிய விருதுகளில் கூட அரசியல் குறுக்கீடுகள் செய்வது ஆபத்தானது என்று எச்சரிக்கை விடுத்த தமிழ்நாடு முதல்வர், “ தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம், மராட்டியம் உள்ளிட்ட மொழிகளில் ஆண்டுதோறும் வெளியாகின்ற இந்திய மொழிகளின் சிறப்புப் படைப்புகளுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய அளவிலான உயரிய “செம்மொழி இலக்கிய விருது” வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். விருதுடன் தலா ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையும், புகழ் பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள், அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும் என்றும் தன்னுடைய அறிவொளி வீசும் அறிவிப்பாக வெளியிட்டதுடன் பெருமை பேச வைத்துள்ளார்.

முதல்வர் அவர்கள் வாசிப்பு மூலம் அறிவுத் தீ பரவட்டும்” என்று திராவிட இயக்க அரசியல் சாசனமாகக் கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார் . பெரியார் உருவாக்கிய திராவிட இயக்கத்தின் ஆணிவேராக அண்ணாவின் தம்பியாக கலைஞரின் வழித்தோன்றலாக முழக்கமிட்டு முத்திரை அறிவிப்பு செய்துள்ளார்.

“இந்தியாவின் பதிப்பகத் தலைநகரமாகச் சென்னை உயர்ந்திருக்கிறது. முன்னணி அறிவுச் சமூகமாக நமது தமிழ்நாடு சமூகம் இருக்கக் காரணம், தமிழ் மக்கள் என்றும் வாசிப்பைக் கைவிடாமல் இருப்பது தான்!” என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னைப் புத்தகக் காட்சி விழாவில் தனது சிறப்புரையில் பதிவு செய்திருக்கிறார்.

வீட்டிற்கோர் புத்தகச்சாலை வேண்டும் என்று அண்ணா அடிக்கடி பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் சுட்டிக் காட்டிப் பேசி வந்தார்கள்.” நம் வீட்டிலே சமையலறை, படுக்கை அறை, குளியலறை, கழிப்பறை என்பன இருப்பது போல, ஒவ்வொருவர் வீட்டிலும் படிக்கின்ற புத்தகங்கள் நிரம்பிய நூலகம் இருப்பது அவசியம்” என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். “உலக அறிவை உருப்படியான காரியத்திற்குப் பயன்படும் வகையில், அறிவை தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்; பழைய முறைகளையும், மூட நம்பிக்கை எண்ணங்களையும், கேடு பயப்பன நூல்களைத் தவிர்க்கப்பட வேண்டும்; பூகோள சரித்திர ஏடுகள் நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தை வாழ்வுக்கான வழிகளைக் காட்ட வீட்டிற்கோர் திருக்குறள் நூல் கட்டாயமாக இருக்க வேண்டும்.

தமிழகத்தின் தனிச்சிறப்பு கூறும் சங்க இலக்கிய சாரத்தைத் தரும் நூல்கள் மக்கள், முன்னேற்றத்திற்கும், வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு தகவல் தெரிவிக்கும் நூல்கள், நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்கள் மாசு துடைத்தவர் கள், தொலைத் தேசங்களைத் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள், சாதனை படைத்த மனிதர்கள் ஆகியோரின் வாழ்க்கை குறிப்புகள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட வீட்டிற்கோர் புத்தகச்சாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கு ஒரு புத்தகசாலை தேவை; ஆனால், கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும்! வீட்டிலே அமைக்கும் புத்தக சாலையானது மாந்தர்க்கு வாழ்வில் விடுதலை ஏற்படுத்த வேண்டியதாக அமைய வேண்டும்! “என்று அண்ணா அவர்கள் நூலகத்தின் அருமை பெருமைகளை வரைந்துகாட்டிப் பேசி உள்ளார் .

இதனை எடுத்துக்காட்டும் விதத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் வாசிப்பும் மூலம் அறிவுத்தீ பரவட்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கிப் பேசியுள்ளார்.

கலைஞர் முதலமைச்சராகவும், தளபதி மு.க.ஸ்டாலின் துணை முதல்வராகவும் இருந்த போது, (20-06-2011) தமிழகத்தில் 12,618 ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பேராலே நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டது. அதற்கான புதிய கட்டடங்கள் கட்டி ஒவ்வொரு நூலகத்திலும் ரூபாய் 50 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள், சிறுவர், இளைஞர்களுக்கான நூல்கள் இடம் பெற்றன. தற்போது தளபதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் 2021 இல் அந் நூலகக் கட்டிடங்கள் யாவும் புனரமைக்கப்பட்டு நிறைய நூல்கள் இடம் பெறத் தக்க வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இத்தாலி நாட்டில் லுனிசியானா மலைப் பகுதியில், ‘மவுண்ட் ரெஜியோ” என்ற பசுமை நிறைந்த சிறிய மலைக் கிராமம் உள்ளது. இதுதான் புத்தகங்களின் அருமை பெருமைகளை உலகிற்கு முதன் முதலாக உணர்த்திக் கொண்டிருக்கிற ஊராகும்.. இந்த கிராமத்தில் இருந்து புறப்பட்ட சபாஷ்டீயானோ என்ற இளைஞன் 15 ஆம் நூற்றாண்டில் வட இத்தாலியில் ஒரு முக்கிய நகரில் மிலான் நகருக்குச் சென்று அச்சுக்கலையைக் கற்று, பின்பு இவர் தொடங்கிய புத்தகம் வியாபாரம் தான் இன்றைக்கு இத்தாலியைத் தாண்டி ஜெர்மனி, ரஷ்யா , பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் புத்தகச் சந்தைகள் தொடங்கி இருக்கின்றன.


ஒருங்கிணைந்த இத்தாலியாக உருவாக்க சுதந்திரப் போராட்டம் நடத்திடக் காரணம். இந்தப் புத்தக வியாபாரிகள் கொண்டு சேர்த்த கருத்துப் பெட்டகங்கள் தான்! இன்றும் அங்குள்ள தெருக்களில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் புத்தகத் திருவிழா நடக்கிறது. உலகம் முழுவதும் வாசகர்களை இங்குக் கொண்டு வந்து சேர்க்கிறது. 1952 முதல் “பிரேமியோ பான் சுரெல்லா” எனும் விருதானது இந்த ஊரின் இலக்கியப் பெருமைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லுகிறது. சுற்றுலா பயணிகள் அனைவரையும் இங்கு ஈர்த்துப் புத்தக வாங்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கி வருகிறது. இன்றைக்கு அதே போன்ற ஓர் அரிய, பெரிய சூழ்நிலையைத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்படுத்திக் காட்டியுள்ளார்.

“ஒரு நூலகம் திறக்கப்படும் போது 100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன” (when a library opens Hundred prisons close) என்றார் புகழ்பெற்ற பிரஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியுகோ (Victor Hugo) என்ற ஓர் அறிஞன்.இதன்மூலம் கல்வி அறிவு, பொருள் அறிவு பரப்புவதால் குற்றங்கள். குறைகின்றன. நூலகங்கள் மக்கள் அறிவைப் பெருக்கிடும் வழிகாட்டுதலாகவும், மேம்பாடு தரக்கூடியவையாகவும் அமைகின்றன. நூலகங்கள் அறிவுத் தேடலை நிறைவு செய்கின்றன. வாசிப்பும், வாசிப்பின் வழியே உருவாகிற எண்ணங்களையும் நம்மை சிறப்பான மேம்பாட்டிற்கு அழைத்துச் செல்கின்றன.

ஐரோப்பிய நாட்டின் மாவீரன் நெப்போலியன் தன் படைவீரர்களுக்கு மத்தியில் உரையாற்றும் போது, “எதிரிகளைப் பந்தாடுங்கள்! சொத்துக்களைச் சூறையாடுங்கள்! ஆனால் ஒருபோதும், எகிப்த்தில் உள்ள ‘அலெக்ஸாண்ட்ரியா’ என்ற நூலகத்தின் பெருமைகளைச் சிதைத்து விடாதீர்கள்!” என்று கட்டளையிட்டான். இதற்கு மாறாக, ஈழத்தில் தமிழர்களால் உயிர்க் கருவூல ஓவியமாக அமைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண நூலகத்தில் 97 ஆயிரம் நூல்கள் தீக்கு இரையாக்கப்பட்டன. ஒரு மொழியின் முக்கியத்துவம் அதன் இனத்தின் அடையாளமாக, இருக்கிறது. பண்பாட்டின் வளர்ச்சியாக, கலாச்சாரத்தின் தொட்டிலாகப் பாதுகாக்கிறது.

“ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால், அதன் மொழியை அழித்துவிடு” என்று சோவியத் யூனியனில் மொழிக் கொள்கை பற்றி விவாதம் வந்தபோது, சோவியத் கல்வியாளரும் சமூகச் சேவகருமான ஆண்டன் மெக்கரன்கோ (Anton Makarenko) போன்ற அறிஞர்களால் சொல்லப்பட்டது . எனவே, நூலகங்கள் இன வழித் தோன்றலுக்கு வழிகோலி மனித வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருகின்றன.

உலகத் தலைவர்கள் எல்லாரும் புத்தகம் படிப்பதன் மூலம் நூல்களின் பெருமைகளையும், நூலகத்தின் சிறப்புகளையும் அறிவதோடு, ஒவ்வொருவரும் நூல் நிலையங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். புத்தகம் வாசிப்பதில் அதிக அக்கறை கொண்டவர் பேரறிஞர் அண்ணா. அவரின் பேனாவையும், செந்நாவையும் பேசாத உலக நாடுகளில்லை. பல்வேறு நூலகங்கள் சென்று வருவதுபோல், அவரது வருகையை அடிக்கடி சென்னை கன்னிமேரா நூலகமும் பதிவு செய்திருக்கிறது.



ஒருமுறை பிரதமர் நேரு தமிழ்நாட்டிற்கு வருகை தந்த போது நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டிய இடைவெளி அதிக நேரம் இருந்ததால், அவசரமாகத் தனக்கு வேண்டிய ஒரு நூல் ஒன்றை கேட்டு, வந்திருந்த நண்பரிடம் அனுப்பி வைத்தார். சென்ற நண்பர் பல்வேறு கடைகள் ,நூல் நிலையங்கள் எங்குத் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. கடைசியில் கன்னிமேரா நூலகம் சென்றடைந்தார். நூல் பற்றி விசாரித்த போது, நூலகர் “ஒரே ஒரு நூல்தான் இருந்தது. அந்த நூலையும் நேற்றுதான் ஒரு நபர் எடுத்துச் சென்று விட்டார்” என்று கூறினார். வந்த நபரோ அதிர்ச்சி அடைந்தார். எடுத்துச் சென்ற நண்பர் யார்? முகவரி, விபரம் என்ன? என்று கேட்டபோது, “சி.என்.அண்ணாதுரை” என்று பதில் சொன்னாராம் நூலகர். அதிர்ச்சி அடைந்த அந்த நபர் உடனே திரும்பி வந்து, அச்செய்தியை நேருவிடத்தில் கூறிய போது, “ அப்படியா? அந்த நூலை எடுத்துச் சென்றவன் மாபெரும் ஒரு அறிஞனாகத்தான் இருக்க வேண்டும்!” என்று நேரு பெருமகனார் சொன்னாராம். அண்ணா எடுத்துச் சென்ற நூல் (Queens of Rome) The Queens of ancient Rome) என்பதாகும் .

அண்ணாவைப் போல அவரின் தம்பி கலைஞரும் வெறும் வாசகர் மட்டுமல்ல; படைப்பாளர் கூட! அவர்கள் இருவரும் தீட்டிய எழுத்து ஓவியங்களைப் படித்துப் பல, பல மாணவர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் எம்.பில்; பி.ஹெச்.டி, பட்டம் வாங்கியவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஆவார்கள் . அண்ணாவையும், கலைஞரையும் நூல்கள் இல்லாத துணையைப் பார்க்க முடியாது . வெளியூர் செல்லக் கார், இரயில் போன்ற பயணங்கள் மேற்கொள்ளும் போதும் அவர்களுடன் ஏறிச் செல்லுவது நூல்கள் தாம். போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச்சாலைக்குள் சென்ற போதும், வெளியில் இருந்து நூல்கள் கொண்டு கொடுக்கப்படும். அதைப் போல் சிறைச்சாலையில் உள்ள நூலகங்களும் அவர்களது கை விரல்களும், மனச் சிறகுகளும் விரிக்காத ஏடுகள் ஏதும் இல்லை. அதனால், பலப் பலக் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், திரைக் கதைகள், கடிதங்கள், அரசியல் விமர்சனங்கள் எனப் பல்வேறு வடிவங்கள் பெற்று அவர்கள் இருவரால் உருவாக்கப்பட்டு இருக்கின்றன .

அண்ணாவின் நாடக எழுத்தோவியத்தைக் கண்டு வியந்து விளித்த கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றோரால் இங்கர்சால், இப்சன், பெர்னாட்ஷா என்றெல்லாம் பாராட்டிப் பேசியது உண்டு.

தி.மு.க. ஆட்சியில், சென்னை கிண்டி கோட்டூர்புரத்தில் அண்ணா நூறாண்டு நூலகம் எனக் கலைஞர் பெயர் வைத்தார். அதைப்போல, கோவையில் பெரியார் நூலகம் என்றும், மதுரையில் கலைஞர் நூலகம் என்றும், திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கி நூலகங்களின் பெருமையைப் பேச வைத்துள்ளார். அதனால் பல்லாயிரக்கணக்கில் மருத்துவம், பொறியியல், சட்டம், விஞ்ஞானம், பொருளியல், ஐ.ஏ.எ.ஸ், ஐ.பி.எஸ். தேர்வுகளில் கலந்து கொள்பவர்களாக பயிற்சி பெற்று உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

தி.மு.க. தலைவர் கலைஞர் அண்ணா அறிவாலயத்தில் ‘பேராசிரியர் அன்பழனார் ஆய்வக நூல்நிலையம் ‘ என்று உருவாக்கி வைத்துள்ளதால், பல்வேறு பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் என உருவாகி வருகிறார்கள்.

சென்னை பெரியார் திடலில், பெரியார் 96 ஆவது பிறந்த நாளான 1974 செப்டம்பர் 17இல் முதல்வர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்ட ‘பெரியார் பகுத்தறிவு டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆய்வு மையம்’ இயங்கி வருகிறது. இங்கு ஏறத்தாழ 1,00,000-த்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள், பெரியார் சொற்பொழிவுகள், எழுத்துகள், பகுத்தறிவு நூல்கள், சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்று நூல்கள் பல இடம் பெற்றிருக்கின்றன.

கம்யூனிஸ்ட்டின் தந்தை காரல் மார்க்ஸ் ‘டாஸ் கேப்பிட்டல்’ (Das Kapital) எனும் மூலதன நூலை எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது பிரிட்டிஷ் அருங்காட்சியம் நூலகம் (British museum Reading Room ) தான். காரல் மார்க்ஸைப் பற்றி அவரின் நண்பர் பிரடெரிக் ஏங்கல்ஸ் 1883 மார்ச் 14 இல் அறிக்கை வெளியிட்டு, மார்க்ஸின் அடக்கத்தின் போது அவர் ஆற்றிய உரையில், “மனித குலத்தின் பெரிய சிந்தனையாளர் சிந்திப்பதை இன்று நிறுத்திக் கொண்டார்” என்று சிறப்புடன் கூறியிருந்தார்

அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரும், நான் ஒரு இந்துவாகச் சாக மாட்டேன் என்று உறுதிமொழி எடுத்தவருமான புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர், இளமைக் காலத்தில் அமெரிக்கா சென்று படித்துத் திரும்பிய நேரத்தில் 1917 ஜூலை20 இல் தான் வாங்கிப் படித்த சுமார் 20,000 மேற்பட்ட நூல்களும், மற்றும் ஆய்வுக் கட்டுரைகளும் இந்தியாவுக்குக் கப்பலில் அனுப்பி வைத்திருந்தார். ஆனால் நூல்களை ஏற்றி வந்த கப்பல் போர் விபத்தில் சிக்கி, கடலில் மூழ்கி போனது. வருத்தப்பட்டார் எனினும் அதன் பின்னர் தனது “இராஜ்கிரக” (Rajgriha) நூலகத்தில் 69,000 நூல்கள் சேர்த்து வைத்து ஒரு தனி நபரே படித்து வந்த பெருமை அவரைச் சாரும். அவர் மறைவுக்குப் பின்பு சித்தார்த்தா கல்லூரி, டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்கு அந்நூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்குப் படித்துச் சென்று கொண்டிருக்கிறார்கள் .

“என்னைப் பார்க்க வரும் நண்பர்கள், கழகத் தோழர்கள் யாவரும் ‘பூங்கொத்து வேண்டாம்; பொன்னாடை வேண்டாம்; மாலை, வேட்டி, துண்டு, சால்வைகள் எனப் போட வேண்டாம்; புத்தகம் கொடுத்தால் போதும்!” (14-05-2021) என்று கூறினார். இன்று பல இலட்சம் நூல்கள் தன்னைக் காண வரும் தோழர்களால் வழங்கப்பட்டு, அவை அனைத்தும் தமிழ்நாடு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள கல்லூரிகளில் உள்ள நூல் நிலையங்கள், பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டு, வாசிக்கப்பட்டு வருகின்றன . உலக வரலாற்றில் இதுபோல எந்த ஒரு தலைவரும், எந்த ஓர் இயக்கமும் இதுவரை செய்யாத நிலையில் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து வரும் அறிவுப் பணியானது மாபெரும் சாதனையாகும்.

நூல்களின் அருமையை, கல்வியின் பெருமையை நபிகள் நாயகம் சொல்லும் போது, சீனா சென்றேனும் கல்வியைக் கற்றுக்கொள் என்றார். அதைப்போல போரில் எதிரிகளைச் சிறை பிடித்து வைத்திருந்த நேரத்தில், அவர்களிடம் உரையாற்றிய நபிகள் நாயகம், ‘உங்களில் யாராவது கல்வி கற்றவராக இருந்தால், கல்வி கல்லாத மக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால், நான் விடுதலை செய்து விடுகிறேன்’ என்று சொன்னவர்தான் நபிகள் நாயகம். அரபு நாட்டில் சீர்திருத்தம் செய்த நபிகள் நாயகம் ‘என்னை வணக்கத்துக்கு உரியவன் ஆக்கி விடாதீர்கள்; என் கல்லறையை வணக்கத் தலமாகக் கருதி யாரும் வணங்கக் கூடாது; அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் அல்ல” என்று கூறியவர். அவர் மறைந்து புதைக்கப்பட்ட அவரது கல்லறையை (கபரிஸ்தான்) நூலகமாக ஆக்கி உள்ளார்கள் என்று செய்திகள் கேள்விப்பட்ட போது, மிகப்பெரிய பெருமைக்குரிய செய்தியாக அல்லவா இருக்கிறது.

ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் ‘திருக்குறளைப் படியுங்கள்; நூலகங்கள் செல்லுங்கள்’ என்று காந்திக்கு அவ்வப் போது கடிதத் தொடர்பில் பதில் எழுதிக் கொண்டிருந்தார் .’என்னைச் சந்திக்க வருபவர்கள், ஏதாவது நான் படிக்காத நல்ல நூல்கள் கொடுத்தால், அதை நான் பெருமையாக கருதுவேன்’ என்று சொன்னவர் தான் மகாத்மா காந்தி!

தென் ஆப்பிரிக்க விடுதலைக்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சிறையில் 27 ஆண்டு காலம் கழித்தவர் நெல்சன் மண்டேலா. அவரிடத்தில், “உங்களுக்கு என்ன வேண்டும்?’ என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, ‘நான் மீண்டும் சிறைச்செல்லச் தயாராக இருக்கிறேன்; ஆனால், அங்கு ஒரு நூலகத்தை மட்டும் ஏற்பாடு செய்து தர வேண்டும். என் ஆயுள் காலம் உள்ளவரை எத்தனை ஆண்டு காலம் வேண்டுமானாலும் கழிப்பேன்” என்று சொன்னாராம் .

உணவுக் குழாயில் புற்றுநோய் (Oral Cancer) அறுவைச் சிகிச்சை செய்வதற்காக அண்ணா அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்க பட்டிருந்த நேரம். அறுவைச் சிகிச்சை செய்வதற்கான நேரம் வந்தது. மருத்துவர்கள் வந்து அண்ணாவை நினைவுபடுத்தி அழைத்த போது, “நான் நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அருள் கூர்ந்து சற்று நேரம் ஒதுக்குங்கள் “ என்று அப்போதும் வாசிக்கும் கல்வியின் தாகத்தை விடாமல், சொல்லி வேண்டுகோள் வைத்திருக்கிறார். அவர் படித்துக் கொண்டிருந்த நூலின் பெயர் மேரி கரோலின் எழுதிய, (The Master Christian) என்ற ஆங்கில நூல் ஆகும் .

அதைப்போல ஆங்கிலேய அரசை எதிர்த்து இந்திய பாராளுமன்றக் படிக்கட்டில் வெடி குண்டு வீசிய விடுதலை வீரன் பகத்சிங் சிறைக் கொட்டடிக்குள் அடைக்கப்பெற்று விசாரணையின் போது தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவனுக்கான தூக்கு போடும் நேரம் நெருங்கியது. அதனை நினைவுப்படுத்த வந்த சிறை அதிகாரி “உங்களுக்கான நேரம் வந்துவிட்டது; நீங்கள் தயாராகுங்கள்” என்று சொன்னான். ஆனால், பகத்சிங்கோ நான் முக்கியமான நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதில் சில பக்கங்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றைப் படித்து விட்டு வருகிறேன்; எனக்கு அதற்கான நேரம் ஒதுக்கித் தாருங்கள்” என்று கேட்டான் பகத்சிங். தான் சற்று நேரத்தில் தூக்குக் கயிற்றை முத்தமிட்டுத் தொங்கப் போகிறோம் எனத் தெரிந்தும் படிக்கிற தாகத்தை விட்டானில்லை அந்த மாவீரன் பகத்சிங்!

லெனின் எழுதிய “அரசும், புரட்சியும்” (State and Revolution ) அல்லது ‘லெனின் நினைவுகள் ‘(Reminiscences of Lenin) எனும் நூலைத்தான் பகத்சிங் படித்துக் கொண்டிருந்தான்.

முதன் முதலில் 1578 ல் இந்தியாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட (Doctorina Christm) எனும் நூல் தமிழில் வெளிவந்ததாகும் இப்போது இந்த புத்தகம் இந்தியாவில் இல்லை. இது அமெரிக்க ஹார்வாட் பல்கலைக்கழக கல்லூரியில் மட்டுமே உள்ளது.

நமது தாய் மொழியான தமிழ் மொழி தான் உலகில் தோன்றிய மூத்த மொழி! முதல் மொழி! இந்த மொழியில் இடம் பெற்ற நூல்களில் அரிய கருத்துக்கள், இலக்கியங்கள், பண்பாடு, கலாச்சாரத்தைக் கூறும் வரலாற்று நூல்கள் இவை அனைத்தும் ஆவணங்களாக உலகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இதற்கான ஆளுமையைத்தான் நம் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

காந்தி அடிகள், திலகர், நேரு, இராஜாஜி, வ.உ.சி, பேரறிஞர் அண்ணா, முத்தமி ழறிஞர் கலைஞர் முதலானோர் சிறையில் இருந்தவாறு பல்வேறு புத்தகங்களை எழுதிப் பெருமைப் படுத்தியுள்ளனர். அவர்கள் உலகுக்கு நூல்கள் மூலம் கருத்துகளாக விருந்தளித்துள்ளனர் .

புகழ்பெற்ற ஃபிரான்சு கவிஞரும், பத்திரிக்கையாளரும், நாவலாசிரியருமானவர் அறிஞர் அனல் டோல் பிரான்ஸ். 1921 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். இவர் சிறந்த நூலகர் என்பதால் பல்வேறு நூல்கள், புத்தகங்களைப் பற்றி விமர்சனம் செய்தவர். இவரது படைப்புகள் சில தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. ‘தாசியும், தபசியும்’ என்ற நாவல் பிரபலமானது. அவர் கூறுகிறார் “புத்தகங்களை இரவலாக யாருக்கும் கொடுக்காதீர்கள்; யாரும் திருப்பித் தருவதில்லை. என்னிடம் உள்ள புத்தகங்கள் யாவும் பிறரிடம் இருந்து இரவல் பெற்றவை”.

இந்திய இலக்கியங்களை காக்கும் முயற்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு செய்து இருக்கிறார். ஒன்றிய அரசு இந்தி, சமஸ்கிருத மொழிகளை திணித்து வரும் நிலையில், முதல்வர் அனைத்துத் தேசிய மொழிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் சாதனை முகவரி எழுதி முத்துக்கள் பதித்து வருகிறார்.